## டிசம்பர் – 29 – சனி

### புனித தோமஸ் பக்கெட்

### “இம்மீட்பே பிற இனத்தாருக்கு வெளிப்பாடு அருளும் ஒளி”(லூக் 2:32)

---

**முதல் வாசகம் : 1 யோவான் 2 : 3 - 11**

அன்பிற்குரியவர்களே! அவருடைய கட்டளைகளை நாம் கடைப் பிடித்தால் நாம் அவரை அறிந்து கொண்டோம் என்பது உறுதியாகத் தெரியும். ”அவரை எனக்குத் தெரியும்” எனச் சொல்லிக் கொண்டு அவருடைய கட்டளைகளைக் கடைப்பிடிக்காதோர் பொய்யர் உண்மை அவர்களிடம் இராது. ஆனால் அவரது வார்த்தையைக் கடைப்பிடிப்போரிடம் கடவுளின் அன்பு உண்மையாகவே நிறைவடைகிறது நாம் அவரோடு இணைந்து இருக்கிறோம் என அதனால் அறிந்துகொள்ளலாம். அவரோடு இணைந்திருப்பதாகக் கூறுவோர் அவர் வாழ்ந்தவாறே வாழக் கடமைப்பட்டவர்கள். அன்பிற்குரியவர்களே! நான் உங்களுக்கு எழுதுவது புதியதொரு கட்டளை அல்ல் நீங்கள் தொடக்கத்திலிருந்தே பெற்றிருந்த பழைய கட்டளை தான் அது. நீங்கள் கேட்டறிந்த வார்த்தையே அப்பழைய கட்டளை. இருப்பினும் நான் உங்களுக்கு எழுதுவது ஒரு புதிய கட்டளையே. அது புதியது என்பது கிறிஸ்துவின் வாழ்விலும் உங்கள் வாழ்விலும் விளங்குகிறது. ஏனெனில் இருள் அகன்று போகிறது் உண்மை ஒளி ஏற்கெனவே ஒளிர்கிறது. ஒளியில் இருப்பதாகச் சொல்லிக் கொண்டு தம் சகோதரர் சகோதரிகளை வெறுப்போர் இருளில்தான் இருக்கின்றனர். தம் சகோதரர் சகோதரிகளிடம் அன்பு கொள்வோர் ஒளியில் நிலைத்திருக் கின்றனர் இடறி விழ வைக்கும் எதுவும் அவர்களிடம் இல்லை. தம் சகோதரர் சகோதரிகளை வெறுப்போர் இருளில் இருக்கின்றனர். இருளில் நடக்கின்றனர். அவர்கள் எங்குச் செல்கிறார்கள் என்பது அவர்களுக்குத் தெரியவில்லை. ஏனெனில் இருள் அவர்களுடையக் கண்களைக் குருடாக்கிவிட்டது.

**பதில்பாடல் :** விண்ணுலகம் மகிழ்வதாக மண்ணுலகம் களிகூர்வதாக.

**நற்செய்தி : லூக்கா 2 : 22 - 35**

மோசேயின் சட்டப்படி தூய்மைச் சடங்கை நிறைவேற்றவேண்டிய நாள் வந்தபோது குழந்தையை ஆண்டவருக்கு அர்ப்பணிக்க அவர்கள் எருசலேமுக்குக் கொண்டு சென்றார்கள். ஏனெனில், ”ஆண் தலைப்பேறு அனைத்தும் ஆண்டவருக்கு அர்ப்பணிக்கப் படும்” என்று அவருடைய திருச்சட்டத்தில் எழுதியுள்ளது. அச்சட்டத்தில் கூறியுள்ளவாறு ஒருசோடி மாடப்புறாக்கள் அல்லது இரு புறாக்குஞ்சுகளை அவர்கள் பலியாகக் கொடுக்க வேண்டி யிருந்தது. அப்போது எருசலேமில் சிமியோன் என்பவர் இருந்தார். அவர் நேர்மையானவர் இறைப்பற்றுக் கொண்டவர் இஸ்ரயேலுக்கு வாக்களிக்கப்பட்ட ஆறுதலை எதிர்பார்த்திருந்தவர் தூய ஆவியை அவர் பெற்றிருந்தார். ”ஆண்டவருடைய மெசியாவைக் காணுமுன் அவர் சாகப்போவதில்லை” என்று தூய ஆவியால் உணர்த்தப் பட்டிருந்தார். அந்த ஆவியின் தூண்டுதலால் அவர் கோவிலுக்கு வந்திருந்தார். திருச்சட்ட வழக்கத்திற்கு ஏற்பச் செய்ய வேண்டியதைக் குழந்தை இயேசுவுக்குச் செய்து முடிக்கப் பெற்றோர் அதனை உள்ளே கொண்டுவந்தபோது. சிமியோன் குழந்தையைக் கையில் ஏந்திக் கடவுளைப் போற்றி, ”ஆண்டவரே, உமது சொற்படி உம் அடியான் என்னை இப்போது அமைதியுடன் போகச் செய்கிறீர். ஏனெனில் மக்கள் அனைவரும் காணுமாறு, நீர் ஏற்பாடு செய்துள்ள உமது மீட்பை என் கண்கள் கண்டு கொண்டன. இம்மீட்பே பிற இனத்தாருக்கு வெளிப்பாடு அருளும் ஒளி இதுவே உம் மக்களாகிய இஸ்ரயேலுக்குப் பெருமை” என்றார். குழந்தையைக் குறித்துக் கூறியவை பற்றி அதன் தாயும் தந்தையும் வியப்புற்றனர். சிமியோன் அவர்களுக்கு ஆசிகூறி, அதன் தாயாகிய மரியாவை நோக்கி, ”இதோ, இக்குழந்தை இஸ்ரயேல் மக்களுள் பலரின் வீழ்ச்சிக்கும் எழுச்சிக்கும் காரணமாக இருக்கும் எதிர்க்கப்படும் அடையாளமாகவும் இருக்கும். இவ்வாறு பலருடைய மறைவான எண்ணங்கள் வெளிப்படும். உமது உள்ளத்தையும் ஒரு வாள் ஊடுருவிப் பாயும்” என்றார்.

**தியானம் :** யேசுவின் பிறப்பால் ஆனந்தம் கொண்டவர்களை விட அச்சப்பட்டவர்கள் அதிகம். பிறந்தவுடனேயே அரசன் ஏரோது அச்சப்படுகின்றான். தன் பதவிக்கு கேடு வந்துவிடும் என்று நினைத்ததால்தான் அவரைக் கொல்லப் பார்த்தான். பின்பு சமுதாயத்தலைவர்களும், பரிசேயர்களும் பயப்பட்டார்கள். அவர்களின் தவறுகளை சுட்டிக் காட்டி, அவர்களின் போலி முகங்களை அவர் கிழித்தார். உண்மையை வெளிப்படுத்தினார். யேசு வெளிப்படுத்தப்பட்ட ஒளியாகவே இவ்வுலகிற்கு வந்தார். அவர் இருளுக்கு கட்டுப்பட்டவர் அல்ல. மானிடர் அனைவருக்கும் ஒளியும் மீட்புமாக இருக்கின்றார். அவரை நம்பும் அனைவரும் மீட்பு அடைவோம் என்பது எமது நம்பிக்கை. ஒளியில் இருப்பதாகச் சொல்லிக் கொண்டு தம் சகோதரர் சகோதரிகளை வெறுப்போர் இருளில்தான் இருக்கின்றனர் என்று இன்றைய முதல் வாசகத்தில் நாம் பார்க்கலாம். நாம் ஒருவரை ஒருவர் அன்பு செய்ய வேண்டும் என்பதே இறைவனின் விருப்பம். யேசு பகைவரையும் நேசித்தார், அதனால் தான் சிலுவை அடியில் தம்மை துன்புறுத்தியவர்களை மன்னிக்க அவரால் முடிந்தது. ஆனால் எம்மால் அவ்வாறு மன்னிக்க முடியவில்லை. எப்போதும் பகைமை பாராட்டுகின்றோம். அவ்வாறான கோப உணர்வுகளை மனதுக்குள் வைத்திருப்பதால்தான் இன்று பலர் பலவிதமான நோய்களுக்கு சொந்தகாரர் ஆகின்றார்கள் என்று ஆராச்சியாளர்கள் கூறுகின்றனர். வருட இறுதியில் நிற்கும் நாம் இவ்வருடத்தில் யாருடனாவது மனக்கசப்பு கொண்டிருந்தால் அவர்களை மன்னிப்போம். அவர்களுடன் இருக்கும் உறவை புதுப்பித்துக் கொள்வோம். இதுவே பிறந்த யேசுவிற்கு நாம் செய்யும் மரியாதையாகும். அப்போது அன்னாவும் சிமியோனும் கண்ட அந்த மீட்பை எம்மாலும் காணமுடியும்.